# <u>சாதாரணக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 2021-ம் ஆண்டு பிலவ வருடம் மே மாதம் **07.05.2021–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் எண் : 64 / 2021</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 10 வரையிலான பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்ட மெயின் குழாய்கள், விநியோக குழாய்கள், கேட்வால்வுகள் மற்றும் சிறு மின்விசைப்பம்பு திட்டத்தின் குழாய்கள், கைபம்புகளில் ஏற்படும் பழுதுகள் பராமரிப்பு பணிக்கு ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்த மதிப்பீட்டுத்தொகை முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே ஒப்பந்த அடிப்டையில் மேற்படி பணியை மேற்கொள்ள வேண்டும். தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது. மேற்படி பராமரிப்பு பணி மிகவும் அவசியமானதாகும். எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் இப்பணியை தொடர்ச்சியாக மேற்கொள்வது அவசியமாகும். இதற்கு ஏற்கனவே இப்பணியை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரான வீரா கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தின் இதே விலை விகிதத்தில் ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டித்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம். இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5.00 /– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவரச அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 005 / 2020 / இ1)

**<u>தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 65 / 2021</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 முதல் 21 வரையிலான பகுதிகளில் சிறு மின்விசைப்பம்பு திட்டங்கள் அமைக்கப்பட்டு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மின்விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும், பராமரிப்பு பணிக்காகவும் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்த மதிப்பீட்டுத்தொகை முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே ஒப்பந்த அடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள வேண்டும். தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது. மேற்படி பராமரிப்பு பணி மிகவும் அவசியமானதாகும். எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், இப்பணியை தொடர்ச்சியாக மேற்கொள்வது அவசியமாகும். இதற்கு, ஏற்கனவே இப்பணியை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரான வீரா கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தின் இதே விலை விகிதத்தில் ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டித்து பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம். இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5.00 /- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவரச அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 005 / 2020 / இ1)

**<u>தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 66 / 2021</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் பொதுக்கிணறுகள் 305, சிறுமின்விசைப்பம்புகள் பொருத்தப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த சிறுமின்விசைப்பம்புகளை கண்காணித்து இயக்கும் பணிக்கு இரண்டு மோட்டார் இயக்குநர்கள் (without ITI category) ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்தக்காலம் 31.03.2021–ல் முடிவடைகிறது. தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது. மேற்படி பணியானது மிகவும் அவசியமானதாகும்.

எனவே பணியின் அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன்கருதியும் இப்பணிக்குரிய பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும் மற்றும் இதற்கு ஏற்கனவே இப்பணியை மேற்கொள்ளும் ஒப்பந்தாரரான வீரா கன்ஸ்ட்ரக்சன் நிறுவனம் மூலமாக, இதே ஒப்பந்த விலைவிகிதத்தில் ஏப்ரல் மற்றும் மே மாதம் வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம். இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 3.50 /- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 005 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 67 / 2021**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளிர் சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ஊதியமாக ரூ. 250 /– வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (4D) எண். 2, நாள். 26.02.2021–ன்படி ஒரு நாள் ஊதியம் ரூ. 250 /–லிருந்து ரூ. 325 /–ஆக உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்து. மேற்படி ஊதிய உயர்வுத் தொகையினை மார்ச் 2021 மாதம் முதல் உயர்த்தி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 தேர்தல் நடத்தை விதிமுறைகள் தற்பொழுது அமலில் உள்ளதால், மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி ஊதியம் உயர்த்தி வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 705 / 2014 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 68 / 2021**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட திருச்சி கோவை சாலையில் நகராட்சி எல்லையில் சாலை விரிவாக்கம் செய்யும் பணிகள் தேசிய நெடுஞ்சாலைத்துறையின் மூலம் நடைபெற்று வருகிறது. இதில் கா.ப.சி.நகர் பிரிவு மற்றும் ஸ்ரீவீரக்குமார் கோவில் தென்புறம் உள்ள சாலையின் நடுவே அகலமாக மைய தடுப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளதால், போக்குவரத்திற்கு இடையூறாகவும், விபத்துக்கள் ஏற்படுத்தும் நிலையில் உள்ளதாகவும் அதனை மாற்றி சிறிய அளவிலான மையத்தடுப்பான் அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். மேற்படி சாலையில் அமைக்கப்பட்டுள்ள மையத் தடுப்பான் அகலமாக இருப்பதால், அதனை சிறு அளவில் மாற்றி அமைக்க தேசிய நெடுஞ்சாலைத்துறையினரை கேட்டுக் கொள்ளலாம். இதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) நகராட்சிப் பொறியாளர் அவர்களின் அறிக்கைப்படி மையத் தடுப்பான் அகலமாக அமைக்கப்படுவதை தவிர்த்து சிறிய அளவில் மாற்றியமைக்க நெடுஞ்சாலைத் துறைக்கு கடிதம் எழுதலாம்.

(கோப்பு எண். 610 /2020 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 69 / 2021**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் பொதுக் கிணறுகள் 305 சிறுமின்விசைப் பம்புகள் பொருத்தப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த சிறுமின்விசைப் பம்புகளை கண்காணித்து இயக்கும் பணிக்கு மோட்டார் இயக்குபவர்கள் (pump operator) (without category) ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தம் 31.05.2021–ல் முடிவடைகிறது. எனவே 2021-2022–ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் இப்பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் குடிநீர் விநியோகப் பணிக்கு இரண்டாவது காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதால், ஏற்கனவே உள்ள பணியாளர்கள் போதுமானதாக இல்லை, என்பதால் கூடுதலாக 7 குழாய் திறப்பாளர்கள் (Turncock) மற்றும் ஓட்டுநர் (Driver) ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். இதற்கான ஒப்பந்தம் 31.05.2021–ல் முடிவடைகிறது. எனவே 2021-2022–ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் இப்பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மோட்டார் இயக்குபவர்கள் 2 பேர், குழாய் திறப்பாளர்கள் 7 பேர் மற்றும் ஓட்டுநர் ஒருவர் ஆகிய

பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வைத்து பணிமேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 70 / 2021**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 10 வரை உள்ள பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோகம் செய்யும் பகிர்மானக் குழாய்கள், அதனுடைய Gate valve மற்றும் அனைத்து உதிரிபாகங்கள், அவ்வப்பொழுது குடிநீர் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யவும் மேலும் மேற்கண்ட அனைத்து பணிகளும் குடிநீர் பணியாக இருப்பதால் பொதுமக்களின் தினசரி தேவையை பூர்த்தி செய்யவும், அவர்களின் நலன் கருதியும் உடனுக்குடன் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்குரிய தொகையானது முடிவடையும் நிலையில் உள்ளதால், 01.06.2021 முதல் 31.12.2021 வரை வருகின்ற 6 மாத காலத்திற்கு மேற்கண்ட குடிநீர் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 71 / 2021**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோகம் செய்யும் பகிர்மானக் குழாய்கள், அதனுடைய Gate valve மற்றும் அனைத்து உதிரிபாகங்கள், அவ்வப்பொழுது குடிநீர் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யவும் மேலும் மேற்கண்ட அனைத்து பணிகளும் குடிநீர் பணியாக இருப்பதால் பொதுமக்களின் தினசரி தேவையை பூர்த்தி செய்யவும், அவர்களின் நலன் கருதியும் உடனுக்குடன் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்குரிய தொகையானது முடிவடையும் நிலையில் உள்ளதால், 01.06.2021 முதல் 31.12.2021 வரை வருகின்ற 6 மாத காலத்திற்கு மேற்கண்ட குடிநீர் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 72 / 2021**

வெள்ளகோவில் நகராட்சி ஈப்பு வாகனம் எண். TN 33 AU 0600-ல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஈப்பு ஓட்டுநர் மனு அளித்ததின்பேரில் பழுதுகளை சரிசெய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான CAI Industries (P) ltd., கோவை நிறுவனத்திடமிருந்து ரூ. 97,442 /- (Pre Invoice No. RO 22P000656, நாள். 07.05.2021 மூலம்) செலுத்தத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை CAI Industries (P) ltd., Covai -க்கு காசோலை மூலம் செலுத்த அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

அலுவலககுறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 73 / 2021</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட சிவநாதபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (OHT) வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு பாதுகாப்பு அவசியம் கருதியும் மற்றும் காவல்துறை ஆய்வாளர் அவர்களின் வேண்டுதல் மற்றும் பரிந்துரையின் அடிப்படையில் மகாத்மாகாந்தி சிலையை சுற்றிலும் Fencing மற்றும் Shed அமைக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே இந்தப் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 58,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 172 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 74 / 2021</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கணபதிபாளையம் பொதுச்சாவடியில் 2021 சட்டமன்ற உறுப்பினர் பொதுத் தேர்தலை முன்னிட்டு மேற்கண்ட இடத்தில் பொதுமக்கள் வாக்களிக்க ஏதுவாக சாய்வுதளம் இல்லாததால், வட்டாட்சியர், காங்கயம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேற்கண்ட பகுதியில் சாய்வுதளம் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 30,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 75 / 2021</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட மூலனூர் சாலை நீர்உந்து நிலையத்தில் (Booster station) உள்ள 30 குவே மோட்டார் பழுதடைந்துள்ளது. இந்த மின்மோட்டார் மூலம் நீர்உந்து நிலையத்தை சுற்றியுள்ள 30 பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளதால், மேற்படி மோட்டாரை உடனடியாக சரிசெய்து உபயோகப்படுத்த தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,10,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 172 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 76 / 2021</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2, கல்லாங்காட்டுவலசு, வார்டு எண். 4, குட்டக்காட்டுப்புதூர், வார்டு எண். 14, சேரன் நகர் கிழக்கு, வார்டு எண். 12, சுப்பிரமணியகவுண்டன்வலசு ஆகிய பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2018-19—ன்கீழ் ஆழ்குழாய் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்சமயம் பணிகள் அனைத்தும் முடிவுற்று மக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி பணிகள் முடிவுற்ற இடத்தில் பெயர் பலகை மற்றும் பெயிண்டிங் பணி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 27,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 172 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

தீர்மானம் எண் : **77 / 2021**

வெள்ளகோவில் நகராட்சி அலுவலகத்தில் ஆணையருக்கு வழங்கப்பட்ட Jeep வாகனத்தில் தற்சமயம் டயர் மற்றும் இதர பழுதுகள் ஏற்பட்டு உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. தற்சமயம் Covid-19 பணிகள் அதிகமாக உள்ளதால், மேற்படி Jeep வாகனத்தில் ஏற்பட்ட டயர் மற்றும் இதர பழுதுகளை மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 42000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் எண் : **78 / 2021**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான மூலனூர் ரோடு, காமராஜபுரம், இந்திரா நகர், இந்திரா நகர் கழிப்பிடம், தீத்தாம்பாளையம், ரெட்டிவலசு, வையபாபுரி நகர், வெங்கமேடு மற்றும் அகலரப்பாளையம்புதூர் ஆகிய பகுதிகளில் உள்ள PVC Tank பழுதடைந்து உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்துள்ள PVC Tank–ஐ மாற்றி புதியாக PVC Tank அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,10,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 172 / 2021 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் எண் : **79 / 2021**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021–ன்கீழ் தார்சாலை அமைக்கும் பகுதிகளில் Gate valve தொட்டிகள் பழுதடைந்து சாலை அமைப்பதற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருப்பதால் அதனை சரிசெய்யப்பட வேண்டும். மேலும் நகராட்சி வளாகத்தில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கழிவறைகளிலிருந்து வெளியேறும் தண்ணீர் தேங்கி நிற்பதால், அதற்கு கழிவறை பின்புறம் நீர் உறிஞ்சும் தொட்டி அமைக்கப்பட வேண்டும். வேலகவுண்டன்பாளையம் பகுதியில் உள்ள நகராட்சிக்குட்பட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்பட்டிருந்த சிறு சிறு பழுதுகளை சரிசெய்யப்பட வேண்டும். எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2,10,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 172 / 2021 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் எண் : **80 / 2021**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் செயல்பட்டு வரும் 67 எண்ணிக்கை கைபம்புகளில் அவ்வப்பொழுது பழுதுகள் ஏற்பட்டு பழுதடைந்து விடுவதால், அதனை சரிசெய்யவும் மற்றும் கோடைகாலமாக உள்ளதால் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையில் கைபம்புகள் இருப்பதால், அதனை உடனடியாக அவ்வப்பொழுது பழுது ஏற்படும்பொழுது சரிசெய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 5,46,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

ஆணையர்
வெள்ளகோவில் நகராட்சி
07/06.21

<u>**சாதாரணக்கூட்டம்**</u>

வெள்ளகோவில் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 2021-ம் ஆண்டு பிலவ வருடம் மே மாதம் **28.05.2021–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

<u>**தீர்மானம் எண் : 81 / 2021**</u>

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட உப்புப்பாளையம் Compost Yard–ல் Bio-mining முறையில் குப்பைகளை அகற்றும் பொழுது Compost yard –ஐ சுற்றியுள்ள வீடுகளில் காற்றின் மூலமாக குப்பைகள் வீசப்பட்டு வீடுகள் இருக்கக்கூடிய பகுதிகளுக்கு செல்லாமல் தடுப்பதற்கும் மற்றும் அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்றும் தற்காலிகமாக குப்பை கிடங்கை சுற்றிலும் தடுப்பு அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 36,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேலும் இப்பணியை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 208 / 2018 / இ1)

<u>**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**</u>

<u>**தீர்மானம் எண் : 82 / 2021**</u>

வெள்ளகோவில் நகராட்சியில் 2020-21–ம் நிதியாண்டில் இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரி, சேவை வரி (GST) மற்றும் ஆண்டு இறுதியில் வழங்கப்படும் படிவம் 16 A, 16 ஆகியவைகள் தயார் செய்து தாக்கல் செய்ய தனியார் வழங்கப்பட்ட தொகை ரூ. 48655 /–க்கு மன்றத்தின் பின்னேற்பும், 2021-22–ம் ஆண்டுக்கு இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரி, சேவை வரி (GST) மற்றும் ஆண்டு இறுதியில் வழங்கப்படும் படிவம் 16 A, 16 ஆகியவைகள் தயார் செய்து தாக்கல் செய்ய தனியார் தணிக்கையின் மூலம் (Private Auditor) பணியை செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000 /-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2020-21–ம் ஆண்டிற்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டதை அங்கீகரிக்கலாம் மற்றும் 2021-22–ம் ஆண்டுக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 1570 / 2017 / பி1)

<u>**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**</u>

<u>**தீர்மானம் எண் : 83 / 2021**</u>

வெள்ளகோவில் நகராட்சியின் 2020-2021–ம் ஆண்டுக்கான வருவாய் நிதி, குடிநீர் வடிகால் நிதி ஆகியவற்றிற்கான ஆண்டு கணக்குகள் Urban Tree Information Software-ல் தனியர் மூலம் தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000 /–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம். செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 640 / 2021 / பி1)

<u>**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**</u>

<u>**தீர்மானம் எண் : 84 / 2021**</u>

வெள்ளகோவில் நகராட்சியில் 2020-21–ம் ஆண்டு சொத்துவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணங்களில் வசூலிக்கக்கூடிய கேட்பில் 99 % மேல் வசூல் செய்தமைக்கு உள்ளாட்சி நிர்வாகத் துறை அரசாணை எண். 2196, நாள். 20.11.1951–ன்படி வருவாய் உதவியாளர்களுக்கு மாத ஊதியத்தில் (அடிப்படை ஊதியம் மட்டும்) 75 % மிகை ஊதியமாக வழங்க வேண்டி அனுமதி கோரி நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 601 / 2021 / சி1)

<u>**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**</u>

**தீர்மானம் எண் : 85 / 2021**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அலுவலக சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 5437 / 2021 / ஜே1, நாள். 23.05.2021–ல் எரிவாயு தகனமேடைகளின் நடவடிக்கைகள் CCTV மூலம் கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதன்பேரில், நகராட்சிக்குச் சொந்தமான கணபதிபாளையம் சாலையிலுள்ள எரிவாயு தகன மேடையில் CCTV அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி தகனமேடையில் CCTV அமைக்க மதிப்பீடு ரூ. 1,26,000 /–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி CCTV அமைக்க வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) அங்கீகரிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அங்கீகாரத்தினை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் வெளியிட்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 86 / 2021**

General Enviro Tech (p) Ltd., நிறுவனத்தின் விண்ணப்ப நாள். 08.01.2021 மற்றும் 31.01.2021 ஆகிய விண்ணப்பங்களில் இந்நகராட்சியில் பணிகள் மேற்கொண்டதில் செலுத்திய வைப்புத்தொகை மற்றும் பணிகளில் பிடித்தம் செய்த வைப்புத்தொகை திரும்ப வழங்க கோரியுள்ளனர். மேற்படி விண்ணப்பத்தினை ஆய்வு செய்து பணியானது முடிக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் பயன்பாட்டில் உள்ளது. எனவே பிடித்தம் செய்யப்பட்ட தொகை வழங்கலாம் என பொறியியல் பிரிவில் அறிக்கை வரப்பெற்றதை தொடர்ந்து கீழ்கண்டவாறு வைப்புத்தொகை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | தேதி / செ. சீட்டு எண் | வேலையின் பெயர் | தொகை | காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேடு 2021-2022 | |
|---|---|---|---|---|---|
| | | | | பக்க எண் | வரிசை எண் |
| 1 | 04.04.12 | Construction of Building Gasifier Crematorium in Ganapathipalayam | 60000 | 10 | 15 |
| 2 | 10.02.12/ DP63953 | கணபதிபாளையம் மின் மயானம் அமைத்தல் | 30000 | 8 | 25 |
| 3 | 25.10.13/ 975336 | கணபதிபாளையம் எரிவாயு மயானத்தில் கேஸ் இணைப்பு அமைத்தல் | 3000 | 15 | 24 |
| 4 | 21.01.14/ 311157 | எரிவாயு மயானத்தில் புகை வெளியேற்றம் விசிறி அமைத்தல் | 3250 | 17 | 50 |
| 5 | 21.01.14/ 311155 | எரிவாயு மயான மேம்பாடு செய்தல் | 10000 | 17 | 52 |
| 6 | 14.02.14/ 832 | Supply and installation of LPG system all accerciers for Gasfire Crematorium squre at Ganapathipalayam Building Ground | 12895 | 18 | 61 |
| 7 | 21.03.14 | கணபதிபாளையம் மின் மயானத்திற்கு கூடுதல் பணிகள் செய்தல் | 60000 | 18 | 68 |
| 8 | | Supply of installation with all accessories in Gasfire crematorium | 3250<br>16250 | 19 | 4 |
| 9 | | Construction of Building for Gasfire Crematorium at Ganapathipalayam Road in S.No.1409 | 259672 | 20 | 16 |
| | | **TOTAL** | **458317** | | |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 697 / 2020 / அ3)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 87 / 2021</u>**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு மினி லாரி வாகனம் எண். TN 42 Y 3074 வாகனத்தின் பேட்டரி மிகவும் பழுதடைந்துள்ளதால் வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பொது சுகாதார வாகனத்தின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பேட்டரி கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 8000 /–ம் ஆகும்.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 617 / 2021 / எச்1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 88 / 2021</u>**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி பணிமேற்பார்வையாளர் அறையினுள் அமைந்துள்ள குளிர்சாதனப்பெட்டியில் ஏற்பட்ட (Air Conditioner) பழுதுகளை சரிசெய்யவும், AC Fan மற்றும் Outdoor unit valve-ஐ மாற்றி அமைக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3700 /–க்கும், மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 /இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 89 / 2021</u>**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி பொறியாளர் அறையினுள் அமைந்துள்ள குளிர்சாதனப்பெட்டியில் ஏற்பட்ட (Air Conditioner) பழுதுகளை சரிசெய்யவும் மற்றும் GAS refilling செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2800 /–க்கும், மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 /இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 90 / 2021</u>**

வெள்ளகோவில் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் துப்புரவு பணி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி எண். K.Dis.No. 28369 / J3, நாள். 04.12.2018 அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 221 ஆகும். ஆனால் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். குறைவான துப்புரவு பணியாளர்களே இருப்பதால் துப்புரவு பணி பாதிக்கப்படாமல் இருக்க இந்நகர்மன்ற தீர்மான எண். 136/2020, நாள்.29.05.2020–ன் படி 117 பேர் தனியார் மூலம் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 513/- என்ற தினக்கூலி அடிப்படையில் இந்நகராட்சியில் 21 வார்டுகளிலும் துப்புரவு பணி செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.06.2020 முதல் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி காலமானது 31.05.2021-ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திடமிருந்து 19.05.2021–ம் தேதிய கடிதத்தில் இப்பணி உத்திரவு ஒப்பந்த காலத்தை மேலும் ஓராண்டு காலம் நீடிப்பு செய்து தரவும் தற்பொழுது திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.எண். 5453 / 2019 / உ3, நாள். 11.08.2020-ன்படி (2020-2021) ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கவும் கோரி விண்ணப்பித்துள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை

அவர்களின் செயல்முறைகள் K.Dis.No. 28369/J3, நாள். 04.12.2018-ன்கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் அடிப்படையில் தேசிய தாழ்த்தப்பட்டோர் நலவாரியத்தால் அவ்வப்பொழுது நடத்தும் ஆய்வு கூட்டத்தில் தொடர்ந்து வலியுறுத்தப்படுவதாலும் அந்தந்த நிதியாண்டிற்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்பொழுது நிர்ணயம் செய்யும் தினக்கூலி தொகையுடன் EPF, ESI, சீருடை, பாதுகாப்பு உபகரணம், ஆயுள் காப்பீடு மற்றும் நிர்வாக கட்டணமும் கணக்கிட்டு ஊதியத்துடன் வழங்கவும், வெள்ளகோவில் நகராட்சியில் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே உள்ளதால், இந்நகராட்சிக்குத் தேவையான துப்புரவு பணியாளர்களின் அளவுகோலில் (221 நபர்கள்) 10% குறைவாகவே உள்ளனர். நகராட்சியிலிருந்து பணியாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்ட ஊதியமானது நகராட்சி வருவாயில் 49 % குறைவாகவே உள்ளது. எனவே காலியாக உள்ள துப்புரவு பணியாளர்கள் பணியிடம் போதுமானதாக இல்லாததாலும், அத்தியாவசியப் பணியான துப்புரவு பணி பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தாலும், தற்போது கொரோனா நோய் தொற்றின் காரணமாக முழு ஊரடங்கு உத்திரவு நடைமுறையில் உள்ளதாலும், ஒப்பந்ததாரர் திரு. M/s. துரை அன்கோ அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தினக்கூலி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /–ஐ ஏற்க மன்ற அனுமதி வேண்டியும், தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், M/s. துரை அன்கோ விண்ணப்பத்தை ஏற்று மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.06.2021 முதல் 30.06.2021 வரை) 117 துப்புரவு பணியாளர்களை விநியோகம் செய்திட காலநீட்டிப்பு செய்திடவும், ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுடன் வரும் காலங்களில் அரசிடமிருந்தும், நகராட்சியிலிருந்தும் பிறப்பிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுடன் சேர்த்து 117 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களை விநியோகம் செய்ய கொரோனா நோய் தொற்று முழு ஊரடங்கு அமலில் உள்ள காரணத்தால் ஒப்பந்த புள்ளி கோர இயலாது என்பதால் M/s. துரை அன்கோ நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.
(கோப்பு எண். 469 / 2020 / எச்1)

<u>**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**</u>

<u>**தீர்மானம் எண் : 91 / 2021**</u>

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி அலுவலக பொதுப்பிரிவில் 2021 -22–ம் ஆண்டுக்கு கணினிகளை இயக்க 3 நபர்களை சப்ளை செய்ய 01.04.2021 முதல் 31.05.2021 வரை இரண்டு மாதங்களுக்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வழங்கிய வேலை உத்தரவு எதிர்வரும் 31.05.2021 –ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்க மன்ற அனுமதி வேண்டியும் தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் விண்ணபத்தை ஏற்று மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.06.2021 முதல் 30.06.2021 வரை) மூன்று ஒப்பந்த தட்டச்சர்களை சப்ளை செய்ய கொரோனா நோய் தொற்று முழு ஊரடங்கு அமலில் உள்ள காரணத்தால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது என்பதால் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.
(கோப்பு எண். 631 / 2018 / எச்1)

<u>**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**</u>

<u>**தீர்மானம் எண் : 92 / 2021**</u>

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் 2021-22–ம் ஆண்டுக்கு கனரக வாகனங்களை இயக்க 4 நபர்களை சப்ளை செய்ய 01.04.2021 முதல் 31.05.2021 வரை இரண்டு மாதங்களுக்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வழங்கிய வேலை உத்தரவு எதிர்வரும் 31.05.2021 –ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள், ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்க மன்ற அனுமதி வேண்டியும் தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் விண்ணப்பத்தை ஏற்று மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.06.2021 முதல் 30.06.2021 வரை) நான்கு ஒப்பந்த கனரக ஓட்டுநர்கள் சப்ளை செய்ய கொரோனா நோய் தொற்று முழு

ஊரடங்கு அமலில் உள்ள காரணத்தால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது என்பதால் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.
(கோப்பு எண். 607 / 2018 / எச்1)
தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

**தீர்மானம் எண் : 93 / 2021**

இந்நகராட்சியில் 2020-21–ம் ஆண்டிற்கு வாரச்சந்தை சுங்க வசூல் மற்றும் பேருந்து நிலைய கட்டணக் கழிப்பிடக் குத்தகைதாரர்களுக்கு, குத்தகைத் தொகையை செலுத்தக் கோரி பலமுறை அறிவிப்பு வழங்கப்பட்டும், கொரோனா நோய் தொற்று காரணமாக குத்தகைத் தொகையை தள்ளுபடி செய்யக் கோரி, குத்தகைத் தொகை செலுத்தாமல் உள்ளதால், கீழ்கண்ட குத்தகைதாரர்கள் மீது குத்தகை நிபந்தனைகளின்படி வழக்குத் தொடரவும், மேற்படி வழக்கிற்கு நகராட்சி வழக்கறிஞர் திரு. சி. ஈஸ்வரமூர்த்தி அவர்களை நியமனம் செய்யவும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | குத்தகை விபரம் | குத்தகைதாரர் பெயர் |
|---|---|---|
| 1 | வாரச்சந்தை சுங்கம் வசூல் | திரு. பி. சுப்பிரமணி, த/பெ. பழனிச்சாமி, 410/2, சக்திநகர் முதல் கிராஸ், ஆண்டான்கோவில் வீதி, கரூர். (ஆதார் எண். 208231423695) |
| 2 | பேருந்து நிலையக் கட்டணக் கழிப்பிடம் | திருமதி. மா. பார்வதி க/பெ. மாரியப்பன், 8/2ஏ, நாச்சம்மாள் லேஅவுட், தெய்வசிகாமணிப் பட்டினம், உடுமலைப்பேட்டை (ஆதார் எண். 950653309272) |

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்த வழக்கிற்கு திரு. சி. ஈஸ்வரமூர்த்தி அவர்களை நியமனம் செய்ததையும், வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 61060 /–ஐ வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1708 / 2019 / அ3)
தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் /
தனி அலுவலர்
வெள்ளகோவில் நகராட்சி

07.06.21